தேதி.17.03.2020



<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

**O.S.No**.246/2018 வா.சா.1 திரு.சங்கரப்பா

<u>பி.வா.சா.1 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

கூடுதல் ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.665-ல் எவ்வளவு பங்கு உள்ளதை என்பதை தெரிந்துகொள்ள வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.666-ன் ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான்கு எல்லைக்காக தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.665/3-ன் மொத்த விஸ்தீர்ணம் 97 1/2 என்றால் 98 செண்ட். சர்வே எண்.665/3-ல் முழுவதும் என் பெரியப்பா நாகப்பாவிற்கு போய் அதன்பிறகு அவரும், அவரது வாரிசுகளும் 6-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்பது தான் என் வழக்கு என்றால் ஆமாம். வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ.26-ல் சர்வே எண்.665/3-ல் 6-ம் பிரதிவாதியை தவிர்த்து மற்ற நபர்களுக்கு கூட்டாக உள்ளது என்றால் ஆமாம். அதனால் 6-ம் பிரதிவாதி பெயரை தவிர்த்து மற்ற நபர்களின் பெயரை வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ.26-ல் சேர்த்தது தவறு என்றால் தவறுதான். அதே போல் சர்வே எண்.665/5-ல் விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 52 செண்ட் என்றால் ஆமாம். மேற்கண்ட சர்வே எண்.665/5-ல் நாகப்பாவிற்கு போய் அதன்பிறகு அவரும், அவரது வாரிசுகளும் 3-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்பது தான் என் வழக்கு என்றால் ஆமாம். சர்வே எண்.665/5-ல் 3 ம் பிரதிவாதி பெயரை தவிர்த்து வேறு நபர்கள் பெயர் இருந்தால் அது தவறு. சர்வே எண்.665/4, மற்றும் சர்வே எண்.665/6-ல் என் அப்பா பெயர் ருத்ரப்பா மகன் சிக்கண்ணா (எ) ருத்ரப்பா என்று கண்டுள்ளது என்றால் ஆமாம். அதனால் என் அப்பா பெயர் சிக்கண்ணா (எ) ருத்ரப்பா என்பது தான் சரி. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6-ல் ருத்ரப்பா என்று தான் கண்டுள்ளது என்றால் ஆமாம் அது தான் என் அப்பா.

வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6-ல் குறிப்பிட்டுள்ள ருத்ரப்பா மக்கள் நானோ, என் சகோதர்களோ அல்ல என்றாலும் அந்த ருத்ரப்பா வேறு நபர் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் எங்களுடைய ஆளுமையினால் பெறப்பட்ட ஆவணங்கள் என்றாலும் அதன் அடிப்படையில் எங்களுக்கு எவ்வித உரிமைமூலம் ஏற்படாது என்றால் சரியல்ல. மற்ற பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் 1-ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒ/ம்.திரு.சங்கரப்பா PW1

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்